**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 78/2011**

2025–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 24–ம் நாள் வெள்ளிக்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 24.10.2025 | | |
| பெயர்: | குமார்<br>(PW– 1 Cross con ) | தகப்பனார் பெயர்: | ராஜமாணிக்கம் |
| கிராமம்: | வைத்தீஸ்வரன்கோயில் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | விவசாயம் | வயது : | 48/2025 |

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 24.10.2025</u>**

**(ஆரம்பித்த நேரம்– 13.16)**

1. நான் பிராதுடன் தாக்கல் செய்துள்ள வரைபடம் தவறு என்றால் சரியல்ல. தாவா சொத்தை சர்வேயர் அளக்கும்போது என்னென்ன ஆவணங்கள் கொடுத்தேன் என்றால் நீதிமன்றத்தின் மூலமாக பட்டா மற்றும் ராஜமாணிக்கம் பெயரில் ஏற்பட்ட பத்திரம் இவற்றை கொடுத்துள்ளேன். ராஜமாணிக்கம் நடேசன் பிள்ளை என்பவரிடமிருந்து ராஜமாணிக்கம் வசிக்கும் இடத்தை வாங்கினார். அந்த பத்திரத்தின் வருடம் தெரியும், ஆனால் தேதி, மாதம் தெரியாது.

2. அந்த பத்திரத்தில் எந்த சர்வே எண் கண்டுள்ளது என்றால் 131/3 என்றுள்ளது. அதில் 48 அடி அகலம், நீளம் வால்வீச்சு என்று உள்ளது. மொத்த விஸ்தீரணம் அதில் உள்ளதா என்றால் தெரியவில்லை. தாவா சொத்து ஆரம்பத்தில் கோபாலர் மடம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தை நீதிமன்றம் மூலமாக நில அளவையர் அளக்கும்போது நான் அந்த இடத்தில் இருந்தேனா என்றால் இல்லை, ஆனால் முடியும்போது வந்தேன்.

3. நீதிமன்ற அளவையர் அறிக்கையில் 1951ம் வருடத்திய எனது தந்தை பெயரில் உள்ளதாக சொல்லப்படும் பத்திரம் சர்வேயரிடம் கொடுத்ததாக கண்டுள்ளது தவறு, அவ்வாறு கொடுத்திருந்தால் நான் நீதிமன்றத்திலும் கொடுத்திருப்பேன், ஆனால் நான் கொடுக்காததால் தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நீதிமன்ற அளவையர் அறிக்கையில் வாதிகள், நீதிமன்றம் மூலமாக நில அளவையர் அளக்கும்போது அந்த இடத்தில் இருந்ததாக குறிப்பிட்டுள்ளது தவறு என்றால் சரியல்ல. என்னை தவிர மற்ற வாதிகள் அங்கு இருந்தனர்.

4. தாவா சொத்து நீதிமன்றம் மூலமாக நாங்கள் தாக்கல் செய்த ஆவணத்தை வைத்து அளக்கப்பட்டது. எந்தெந்த இடத்தை அளந்தனர் என்றால் எல்லா புறமும் அளந்து ஆக்கிரமிப்பு உள்ளது என்று வரைபடம் கொடுத்துள்ளார். 4 திசையிலும் எந்த இடத்திலிருந்து அளக்க ஆரம்பித்தனர் என்றால் மேற்கில் BMS lodge, கிழக்கில் சுசீலா, வடக்கில் ரோடு, தெற்கில் குட்டை ஆகும். குட்டையை அளக்கவில்லை, ஆனால் குட்டைக்கு அருகிலுள்ள நான்கெல்லையிலிருந்து அளக்கப்பட்டது.

5. தாவா சொத்துக்கு மேற்கில் பிரதிவாதியின் கணவர் பாலு என்பவர் 25.12.1986 தேதியிட்ட கிரயம் வாங்கிய இடம் உள்ளது என்றால் சரிதான். அதில் முன்பக்கம் பாலுவும் பின்பக்கம் பிரதிவாதியும் வாங்கியுள்ளனர் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதில் பாலு வாங்கிய இடம் 69 அடி நீளம் இருக்கும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. கிரயம் வாங்கும்போதே பாலுவின் இடத்தில் 1 ½ அடி தாய் சுவர் இருந்தது என்றால் சரிதான். அதேபோல் பின்பக்கத்தில் ½ அடி சுவர் உள்ளது என்றால் இல்லை, ஆனால் அது ஆக்கிரமித்து கட்டப்பட்டது.

6. எந்த தேதியில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டது என்றால் பிரதிவாதியும் அவரது கணவரும் வெளிநாட்டில் இருந்தபோது திருவேங்கடம் என்பவர் அந்த இடத்தில் வாடகைக்கு குடியிருந்தார், அவர் மூலமாக ஆக்கிரமிப்பு செய்யப்பட்டது, ஆனால் தேதி தெரியாது. தாவா B அட்டவணை சொத்தை எந்த தேதியில் ஆக்கிரமித்தார் என்று எனது வழக்குரையில் கூறவில்லை என்றால் சரிதான், ஆனால் வழக்குரை பிற்பாடு திருத்தப்பட்டது. ExC2 ஆவணத்தில் சிவப்பு கலரில் உள்ள இடம் பிரதிவாதிக்கு சொந்தமானது என்றால் இல்லை, ஆக்கிரமிப்பு செய்யப்பட்டது.

7. அந்த சிவப்பு கலர் உள்ள இடத்தில்தான் பிரதிவாதியின் சுவர் வருகிறது என்றால் இல்லை. அது ஆக்கிரமிப்பு பகுதியாகும். அந்த சிவப்பு கலர் உள்ள பகுதி இந்த பிரதிவாதி கிரயம் வாங்கவதற்கு முன்பிலிருந்தே உள்ளது என்றால் ஏற்கனவே இருந்தவர் ஆக்கிரமித்து விட்டார், அதன்பிறகு ஆக்கிரமிப்பாகவே இருந்து வருகிறது. அதனால் வழக்கிற்கு பிறகுதான் பிரதிவாதி ஆக்கிரமித்தார் என்று நான் கூறுவது தவறு என்றால் சரியல்ல.

8. அந்த சிவப்பு கலர் பகுதிக்கு வடக்கில் ரோடு உள்ளதா என்றால் சுவற்றின் முடிவில் ரோடு உள்ளது. சிவப்பு கலர் பகுதிக்கு வடக்கில் ரோடு இல்லை என்றால் சரியல்ல. சர்வேயர் வரைபடத்தில் நடு அளவு குறிப்பிட்டுள்ளாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதனால் நில அளவையர் கடந்த 06.04.2012 அன்று அளந்த பிறகு தான் ஆக்கிரமிப்பு தெரிய வந்தது என்று நான் கூறினால் தவறு என்றால் சரியல்ல.

9. சர்வேயர் அறிக்கை மற்றும் வரைபடம் தவறாக உள்ளது என்றால் சரியல்ல. அதனால் அவரது அறிக்கை மற்றும் வரைபடம் நிராகரிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல. நான் சொல்லியுள்ள வழக்கு மூலம் தவறானது என்றால் சரியல்ல. தாவா சொத்து எனக்கு உரிமையானது என்று நான் விளம்பல் பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் கேட்டுள்ளேன். நீதிமன்ற கட்டணப் பிரிவு

நான் தவறுதலாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் பிரதிவாதி கட்டுமானங்களை அகற்றி காலியிடமாக ஒப்படைக்க அவசியமில்லை என்றால் சரியல்ல. அதனால் எனக்கு எவ்வித பரிகாரமும் கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்– 14.07 )**